**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 861/2019 |
| நாள் | 07.11.2025 |
| வா.சா.2 | சுப்ரமணியன் |
| வயது | 78 |
| ஊர் | பசுபதிபாளையம் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சேகர் என்பவர் தாக்கல் செய்த காசோலை வழக்கில் நான் சாட்சியம் அளித்தேனா என்றால் அதை பற்றி எனக்கு நியாபகமில்லை. மேற்படி காசோலை வழக்கில் நான் சாட்சியம் அளித்ததை ஒப்புக்கொண்டால், இவ்வழக்கிற்கு பாதகமாகும் என்பதால் நியாபகமில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி காசோலை வழக்கில் இவ்வழக்கின் வாதிக்கு எவ்வித கடனுறுதிச்சீட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. சத்யபிரியா என்பவர் கோயம்புத்தூரில் எவ்வளவு வருடங்களாக வாழ்ந்து வந்தார் என்று எனக்கு தெரியாது. மேற்படி சத்யபிரியா என்பவருக்கு நான் தனிப்பட்ட முறையில் கடன் கொடுத்துள்ளேன். சுமார் 12 வருடங்களுக்கு முன்பாக மேற்படி சத்யபிரியா என்பவருக்கு ரூ. 5,00,000 த்தை கடனாக கொடுத்தேன். மேற்படி சத்யபிரியா என்பவர் என்னிடம் வாங்கிய கடன்தொகையை திருப்பி செலுத்த முடியாததால் அவரது சொத்தை நான் எழுதி வாங்கினேன்  என்றால் சரியல்ல. மேற்படி காசோலை வழக்கு எண். 93/2020–ல் நான் வாங்கிய கிரய பத்திரத்தில் வா.சா.1 கார்திகேயன் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் நியாபகமில்லை. பிரதிவாதிகள் வாதியிடமிருந்து எந்த கடன் தொகையும் பெறவில்லை என்றும், அதை பற்றி முழு விவரங்கள் எனக்கு தெரியாததால்

தான் நான் வேண்டுமென்றே நியாபகமில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. என் தரப்பு சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.